TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8074701

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் விருதுநகர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 04/2022 Date: நாள் 12.09.22

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Ammendment) Act-2018 Sections பிரிவுகள்: 7 of PC (Ammendment) Act-2018.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06-09.22 Date to : நாள் வரை இன்று 12.09.22
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 09.30 hrs Time to : நேரம் வரை 09.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.09.22 Time : நேரம் 16.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பாளையம்பட்டி துணை மின் நிலையம், சுமார் 25 கி.மீ /கிழக்கே
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S.: District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. வீரம்மாள் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கேசவன் (late).
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1970 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வியாபாரம் (g) Address : முகவரி கதவு எண். 1/11, வடக்குத் தெரு, கட்டங்குடி (Post), அருப்புக்கோட்டை (Tk), விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பத்மநாதன், உதவி பொறியாளர், பாளையம்பட்டி துணை மின் நிலையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — இல்லை —

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 12.09.2022 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கட்டங்குடி கிராமம், வடக்குத் தெருவை சேர்ந்த திருமதி.வீரம்மாள் என்பவர் என் முன்பாக ஆஜராகி சொன்ன புகாரை மாலை 16.00 மணியிலிருந்து 17.00 மணிக்குள் அலுவலக கணினி மூலமாக தயார் செய்து, அதை அவருக்கு படித்துக் காண்பித்தேன். அவர் சரியாக உள்ளது என்று சொன்னார். அந்த புகாரை பிரிண்ட் எடுத்து, அதில் புகார்தாரர் திருமதி.வீரம்மாள் அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். மேற்படி புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து, அனுமதி பெற்றேன். பின்னர் இன்று 12.09.2022 மாலை 18.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.பத்மநாதன் என்பவர் மீது விருதுநகர் ஊழல்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.வீரம்மாள் 12.09.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 12-9-2022

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(K.ராமச்சந்திரன்)
Name: பெயர் ADSP/V&AC/VNR [DD]
Rank: நிலை ....................No. எண் .........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2022 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act-2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். மேற்படி புகார்தாரர் திருமதி.வீரம்மாளின் புகார் விபரம் பின்வருமாறு :- திருமதி.வீரம்மாள், வயது 50/2022, க/பெ.கேசவன் (லேட்), கதவு எண்.1/11, வடக்குத்தெரு, கட்டங்குடி கிராமம், கட்டங்குடி அஞ்சல், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் இன்று 12.09.2022 மாலை 16.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு :- நான் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கட்டங்குடி கிராமத்தில் வடக்குத்தெருவில் கதவு எண்.1/11 என்கிற முகவரியில் என் மகன் திரு.கார்த்திக் ராஜா, அவரது மனைவி திருமதி.கருப்பாயி ஆகியோர்களுடன் குடியிருந்து வருகிறேன். நான் 3ஆம் வகுப்பு வரைதான் படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது, கையொப்பம் மட்டும் போடுவேன். அருப்புக்கோட்டை தாலுகா, கட்டங்குடி கிராமம், கதவு எண்.1/690, அம்மா நகர் காலனியில், அம்மா திட்டகாலனி குடியிருப்பு அருகில் என்னுடைய இடத்தில் ஒரு சிறிய தகர செட் அமைத்து சிறியளவில் பலசரக்கு கடை நடத்தி வருகிறேன். என் கணவர் திரு.கேசவன் அவர்கள் சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக இயற்கை எய்துவிட்டதால், என் குடும்பத்தை நானே பராமரித்து வருகிறேன். என் மகன் திரு.கார்த்திக் ராஜா, திருச்சுழி தாலுகா, புலியூரான் கிராமத்தில் அமைந்துள்ள கோப்பம்மாள் என்கிற தனியார் ஸ்பின்னிங் மில்லில் தினக்கூலியாக வேலை செய்து வருகிறார். என் பெயரில் கட்டங்குடி வடக்கு தெருவில் இருக்கும் இடத்தில் சுமார் 12 செண்ட் இடத்தை என் மூத்த மகன் கார்த்திக் ராஜாவிற்கு, நானும், என் இளைய மகன் லெக்குசாமியும் சேர்ந்து அருப்புக்கோட்டை சார்பதிவகம் ஆவண எண். 6395/2021-இன்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி கொடுத்தோம். அந்த இடத்தில் 2 பழைய மின்கம்பங்கள் உள்ளது. அந்த 2 பழைய மின்கம்பங்களை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டி, என் மகன் கார்த்திக் ராஜாவும், நானும், என் மகன் கார்த்திக் ராஜா பெயரில் ஒரு மனுவை தயார் செய்து, கடந்த பிப்ரவரி மாதம் ஒரு நாள் பாலையம்பட்டியிலுள்ள EB ஆபீஸிற்கு சென்று, அங்கிருந்த AE பத்மநாதனை சந்தித்து, அவரிடம் அந்த மனுவைக்கொடுத்தோம். நாங்கள் மனு கொடுத்த பிறகு EB ஆபீஸ் AE, EB ஆபிஸ் AD ஆகியோர் தனித்தனியாக பழைய மின்கம்பங்கள் மாற்றி அமைக்கவுள்ள இடத்தை வந்து பார்வையிட்டு சென்றனர். அதன்பிறகு எந்த ஒரு தகவலும் இல்லாததால், என் மகன் மில் வேலைக்கு செல்வதால், நான் கடந்த 06.09.2022ஆம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் பாலையம்பட்டி EB ஆபீஸ் சென்று, அங்கிருந்த AE பத்மநாதனை சந்தித்து, என் மகன் பெயரில் நாங்கள் கொடுத்த மனு சம்பந்தமாக விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் அம்மா

உங்க மகன் கொடுத்த மனுமீது நான் நடவடிக்கை எடுத்து ஒரு மதிப்பீடு தயார் செய்து அருப்புக்கோட்டையில் உள்ள AD ஆபிசுக்கு அனுப்பி விட்டேன், இன்னும் AD ஆபிசிலிருந்து நீங்க எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்ற ஆர்டர் வரவில்லை. அந்த ஆர்டரும் கிடைக்க நான்தான் ஏற்பாடு செய்ய வேண்டும், அதன்பின்பு உங்க இடத்திலுள்ள பழைய மின்கம்பங்களையும் நான்தான் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகையால் நீங்க 20 ஆயிரம் ரூபா ரெடிபண்ணி கொண்டுவந்து என்கிட்ட கொடுக்கவேண்டும் என்றும், 20 ஆயிரம் ரூபாயை கொடுத்தீங்கண்ணாதான் AD ஆபிசிலிருந்து நீங்க எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்ற ஆர்டரும் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்றும், அதன்பின்புதான் உங்க இடத்திலுள்ள பழைய மின்கம்பங்களையும் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறிக்கொண்டே அலுவலகத்தைவிட்டு வெளியே சென்றுவிட்டார். அதன்பின்பு திரும்பவும் இன்று 12.09.2022 காலை சுமார் 9.30 மணியளவில் பாலையம்பட்டி EB ஆபீஸ் சென்று, AE பத்மநாதனை சந்தித்து, என் மகன் பெயரில் நாங்கள் கொடுத்த மனு சம்பந்தமாக மீண்டும் விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம், என்னம்மா நான் கேட்ட ரூ.20,000/-தை கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், சார், நாங்கள் கஷ்டபட்ட குடும்பத்தை சேர்ந்தவங்க சார், நீங்க பார்த்து செஞ்சு குடுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம், சரிம்மா ரூ.10,000/-பணத்தையாவது ரெடிபண்ணி கொண்டுவந்து என்கிட்ட கொடுத்துருங்க, AD ஆபிசிலிருந்து நீங்க எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்ற ஆர்டர் கிடைக்கவும், அதன்பின்பு உங்க இடத்திலுள்ள பழைய மின்கம்பங்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்குவும் நடவடிக்கை எடுக்கிறேன் என்றும், இதுலையும் எதுவும் பணத்தை குறைச்சு கொண்டுவந்திராதிங்க என்றும் கண்டிப்புடன் கூறி அனுப்பி வைத்தார். AEக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் வேறு வழியில்லாமல் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். AE பத்மநாதன் லஞ்சமாக என்னிடம் கேட்ட ரூ.10,000/- பணத்தை ரெடிபண்ணி கொண்டுவந்துள்ளேன். என் மகன் இடத்தில் உள்ள பழைய மின்கம்பங்களை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க நடவடிக்கை எடுப்பதற்காக என்னிடம் இறுதியாக ரூ.10,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட பாலையம்பட்டி மின்சாரவாரிய AE பத்மநாதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படிக்க கேட்டேன். சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு (sd), K.விரம்மாள் 12.9.2022, Sir, Received by me between 16.00 hrs. and 17.00 hrs. on 12.09.2022. The genuiness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular

case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.4/2022 u/s 7 of P.C. (Amendment) Act 2018 on 12.09.2022 at 18.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 12.09.'22 ADSP / V&AC / VNR [OD].

12.09.22

(K.RAMACHANDRAN)
ADSP / V&AC / VNR [OD].